R 5520 (page 248)

# உடனடி கீழ்ப்படிதலால் உண்மைத்தன்மை நிரூபிக்கப்படும்
## LOYALITY PROOVED BY PROMPT OBEDIENCE

“என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான், நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்” - யோவான் 14:21.

இப்பாடத்தின் திறவுகோல் வசனம், நம் கர்த்தர் சிலுவையிலறையப்படுவதற்கு முன்னர், தம் பன்னிரெண்டு சீஷர்களுக்கு கொடுத்த இறுதி பிரசங்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது. “என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டவன்.." என்ற வார்த்தைகள், என் கற்பனைகளை அடைந்திருக்கிறவன் மனப்பூர்வமாக என் சீஷனாகிறான் என்பதைக் குறிப்பிடுகிறது. கட்டளையை வெறுமனே கேட்பது அல்லது கட்டளையை புரிந்து கொள்வது என்பது, அதைப் பெற்றிருத்தலாகாது. இக்கருத்தை ஜனங்கள் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். அநேகர் கட்டளைகளுக்கு செவிசாய்க்கிறார்கள், அதற்கு பகுதியளவு கீழ்ப்படிதலை காண்பிக்கின்றனர், ஆனால் உண்மையான அர்த்தத்தில் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடனான நிலையான ஒப்பந்தத்தின் இக்காரியமானது, மிக முக்கியத்துவமான ஒன்று. இதை ஏற்படுத்தாதவர்கள் அவருக்கு உண்மையான சீஷர்களல்லர், அவருடைய கரங்களுக்குள் தங்களை நிஜமாக ஒப்புக்கொடுக்கவில்லை, ஆகவே இவர்களது கப்பல் கவிழும் ஆபத்திலுள்ளது.

ஒரு நிலையான ஆசீர்வாதத்தைக் குறித்து நாம் அறிந்திருக்கலாம், ஆனால் கர்த்தருடனான உறவில் நம் ஒப்பந்தத்தை முடிக்கவேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். “கர்த்தருடைய சித்தத்துக்கு முரணாக நான் எதையும் செய்ய முயற்சிப்பதில்லை, அவர் என்னை வலியுறுத்துகிற காரியங்களை மட்டுமே செய்வேன்" என்று வெறுமனே கூறலாம், கிறிஸ்துவின் பள்ளியில் நுழைபவர்க்கான சரியான மனப்பான்மை இது அல்ல. கிறிஸ்துவின் சீஷர்களாவதற்கு சில நிலையான படிகள் உள்ளன. ஒரு பள்ளியில் ஒரு நபர் பார்வையாளராக இருக்கலாம், ஆனால் அப்பள்ளி இயக்குகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளை ஏற்றுக்கொண்டு, அவர் அந்தப் பள்ளியின் நிபந்தனைகளை சந்தித்திராவிடில், அவர் அந்தப் பள்ளியின் உறுப்பினராக இருக்கமாட்டார்.

### நம் கர்த்தரின் அன்பின் பிரமாணம்

“நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குட்படாமல் கிருபைக்கு உட்பட்டிருக்கிறீர்களே!" என்று அப்.பவுல் கூறுகிறார். இன்னும் நம் கர்த்தர், அவருடைய கட்டளைகளை நாம் கைக்கொள்வது குறித்துப் பேசுகிறார். இந்த **[R5520 : page 249]** இரு கருத்துக்களை எப்படி நாம் இசைவாக்குவது ? கிறிஸ்து கொடுத்த கட்டளைகளாகிய பிரமாணத்துக்கும், அப்போஸ்தலர் குறிப்பிடுகிற நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டோரல்ல. அதன் ஆசீரைப் பெறவிரும்புவோர், அதற்குத் தேவையான அதன் ஒவ்வொரு எதிர்பார்ப்பையும் பூரணமாக கடைப்பிடிக்கவேண்டும், அல்லது மரணசாபத்தால் துன்புறவேண்டும். நம் கர்த்தராகிய இயேசுவின் ஏற்பாட்டின்கீழ், அவரது சீஷர்களாக

இருப்போர், ஏற்கனவே அவருடைய நீதியின் ஆடையின் கீழுள்ளனர், இவர்கள் அவருடைய கட்டளைகளை செய்யத்தேடவும், அவரது சித்தம் செய்ய தங்கள் முழு இருதயத்தோடு போராடவும் வேண்டும், அதனால், அவர் மூலமாக நித்திய ஜீவனை அவர்கள் பெறுவார்கள். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தர். அபூரணங்களுக்காக எந்த சலுகையும் அளிக்க தகுதி பெற்றிருக்கவில்லை.

நம் கர்த்தர் இங்கு, “கட்டளைகள்” என்று பன்மையில் பேசுகிறார். ஆகவே இவ்வார்த்தைகளை “நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையாக கொடுக்கிறேன்” என்று அவர் கூறியதோடு இணைத்து, இரண்டும் ஒரே அர்த்தமுடையது என்று புரிந்துகொள்ளக் கூடாது. அல்லது பத்துக்கட்டளைகளின் பிரமாணத்தை; “உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு சிந்தையோடும் நேசிப்பாயாக, உன் அயலானை உன்னைப்போல் நேசிப்பாயாக" என்று சுருக்கமான அறிக்கையாக அவர் அர்த்தப்படுத்துவதாக புரிந்துகொள்ளக்கூடாது. யார் என் போதனைகளை ஏற்றுக்கொண்டு, என்னைப் பின்பற்றுகிறார்களோ, அவர்கள் என்னிடத்தில் அன்பாயிருப்பதை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள், அவர்களை நானும் நேசிக்கிறேன் என்பதே நம் கர்த்தர் அர்த்தப்படுத்துவதாக நாம் புரிந்துகொள்கிறோம். இந்தக் கட்டளைகள், வாழ்க்கையின் எல்லா நடவடிக்கைகளிலும் அவர்கள் தாங்கியிருக்கின்ற, கர்த்தருடைய பொதுவான போதனைகளாக காணப்படுகிறது. மத்தேயு 5ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள குறிப்பிட்ட சில தொகுப்புக்களைப்போல, இவையும் சில தொகுப்புக்கள் என நாம் புரிந்துகொள்ளலாகாது. அங்கே (மத்தேயு 5ம் அதிகாரத்தில்), சாந்தம், நீதி போன்ற பல பண்புகள் அவசியமானவைகளாக அவர் வரையறுக்கிறார். இவைகள் கட்டளையிடப்படவில்லை.

## அன்பு ஊழியம் செய்வதில் சந்தோஷப்படும்

நம் கர்த்தரின் கட்டளைகள் வற்புறுத்தப்படும் விதத்தில் கொடுக்கப்படவில்லை, மாறாக அவரை யார் நேசிக்கிறார்களோ, அவர்கள் அவருக்கு ஊழியம் செய்வார்கள். அப்போஸ்தலருடைய நிருபங்கள் மூலமாக பேசுகையிலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்திலும், எது நீதி என்றும், எது அன்பு என்றும் இயேசு நமக்கு பல்வேறு வெளிப்பாடுகளை கொடுத்திருக்கிறார். ஆகவே யாரெல்லாம் அவரோடுகூட இருக்கவும், ஆளுகை செய்யவும் விரும்புகிறார்களோ, அவர்கள் அவரிடமிருந்துவருகிற ஒவ்வொரு சைகைக்கும் கீழ்ப்படிய மனதாயிருப்பார்கள். ஒரு தன்னிச்சையான கட்டளையின் தன்மையில் எதுவும் இல்லை, வெறும் கொள்கையின் நிலைப்பாடு மட்டுமே உள்ளது. ஆனால் இவைகள் நமக்கு கட்டளைகளாகின்றன. அவரை நேசித்து அவருக்கு ஊழியம்புரிய விரும்புவோர்க்கு அவரது சித்தத்தை அறிவது ஒரு பிரமாணமாகிறது. “செய்வாயாக, செய்யாதிருப்பாயாக" என்று நாம் விடப்படாதபடி, நம் ஆர்வத்தையும் உண்மைத்தன்மையையும் நிரூபிக்கும்படியாக, இது இந்த யுகத்தின் தெய்வீக ஏற்பாடாக காணப்படுகின்றது.

“நான் பெயர்சபையை விட்டுவிடாதிருப்பேனாகில் அல்லது அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானத்தை நான் நிறைவேற்றாதிருப்பேனாகில், கர்த்தர் என்னை புறக்கணிப்பார் என்று நீ எண்ணுகிறாயா" என்று, சிலசமயங்களில் நம் நண்பர்களில் சிலர் நம்மிடத்தில் கேட்கக்கூடும். அவர்கள் முழு விஷயத்தையும் தவறாகப் புரிந்திருக்கிறார்கள் என்று நாம் அவர்களிடத்தில் கூறவேண்டும். கர்த்தர் நமது கடமையையும் சிலாக்கியத்தையும் மட்டுமே நமக்குக் காண்பிப்பார், கர்த்தருடைய சித்தம் செய்வதில் களிகூறாதவர்கள், அவரிடத்தில் அர்ப்பணிக்காதிருத்தலே சிறந்ததாயிருக்கும். தம்மைத்

தொழுதுகொள்வோர் ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளவேண்டும் என்றே கர்த்தர் விரும்புகிறார். ஆயிரமாண்டு அரசாட்சியில் உலகத்தை தண்டனைகள் மற்றும் ஆசீர்வாதங்கள் மூலமாக அவர் நடத்துவார். அங்கு கீழ்ப்படிதல் என்பது நிர்ப்பந்திக்கப்படும். ஆனால் இதோ என் சித்தம், நீ விரும்பினாயானால் மேலோட்டமாக மட்டும் பார்க்காமல், அதன் வழி கூறப்படும் உட்பொருளை கவனித்து அர்த்தம் பெறுதல் வேண்டும் என்று இப்போது அவர் கூறுகிறார். நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு நான் உன்னை கீழாக்கவில்லை, மாறாக உன் முன்பாக மாபெரும் வாய்ப்பை நான் வைத்துள்ளேன். நீ இந்த சிலாக்கியத்தை மதித்துணர்வாயானால் என் சீஷனாவாய். உடனடி நேர்மறையான நிலைப்பாட்டினை எடுப்பதன்மூலம், உன் கீழ்ப்படிதலையும் மதித்துணர்தலையும் காண்பி, உன்னை நீ மேன்மை பாராட்டத் தேவையில்லை. எதையும் நான் உன்னிடம் வற்புறுத்துவதில்லை, வாய்ப்பை மட்டுமே உனக்கு அளிப்பேன்.

கர்த்தருடைய மாபெரும் கொடையை மதித்துணர்வோரை அவர் கவனத்தில் கொள்கிறார். அவரது மணவாட்டியை ஏற்றுக்கொள்ள அவர் வரும்போது, அவர்களே அவரோடுகூட ஆளுகை செய்வார்கள்.